**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: STC 393/2021**
**Deposition of witness for prosecution –PW– 1(Cross)**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சவரிமுத்து |
| Father Name | : | திரு. ஜெபமாலை |
| Village | : | |
| Taluk | : | இராமநாதபுரம் |
| District | : | இராமநாதபுரம் |
| Caste | : | |
| Calling | : | Pharmacy |
| Religion | : | |
| Age | : | 54 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the 12th day of June 2024.

**குறுக்கு விசாரணை:**

இவ்வழக்கில் 1வது எதிரியாக காட்டப்பட்டு நிறுவனம் ஆனந்த் என்பவர் மூலம் தான் எனக்கு அறிமுகமானது என்றால் சரிதான். ஆனந்த் என்பவரை எத்தனை வருடமாக தெரியும் என்றால் 2018லிருந்து எனக்கு தெரியும். அவர் அரசாங்கத்தில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பொதுவாக ஆனந்த் என்பவர் எனக்கு அறிமுகமான பிறகு நான் அவருடைய அலுவலகத்திற்கு சென்று பார்த்தேனா என்றால் இல்லை. ஆனந்த் என்பவருடைய அலுவலகம் எங்கு உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அது எங்கு உள்ளது என்றால் காதர் டீலக்ஸ் மஹாலில் உள்ளது. என்னுடைய முதல் விசாரணையில் காதர் டீலக்ஸ் மஹாலில் நான் கலந்து கொண்டதற்கு ஏதேனும் ஆவணங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கலந்து கொள்ள ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்ய இயலாது. கம்பெனி சார்பாக மீட்டிங்கில் கலந்து கொள்வதற்கு எனக்கு ஏதேனும் அறிவிப்பு முறைப்படி அனுப்பப்பட்டதா என்றால் இல்லை. அவர் நேரடியாக வந்து தான் என்னை அழைத்தார். எனக்கும் ஆனந்திற்கும் போன் மூலமாக ஏதேனும் தொடர்பு உண்டா என்றால் இல்லை. எனக்கு மொத்தம் எத்தனை வங்கி கணக்குகள் உள்ளது என்றால் 2 வங்கி கணக்குகள் உள்ளது. 2 வங்கி கணக்குகளும் என்னுடைய தனிப்பட்ட பெயரில் உள்ளதா என்றால் 1 தனிப்பட்ட பெயரில் உள்ளது மற்றொன்று என்னுடைய மருத்துவக்கடையின் பெயரில் உள்ளது. இராமநாதபுரம் கனரா வங்கி கிளையில் என்னுடைய வங்கி கணக்கு

என்னுடைய பெயரில் உள்ளது. தமிழ்நாடு பாண்டியன் கிராம வங்கியில் உள்ள வங்கி கணக்கு மருத்துவக்கடையின் பெயரில் உள்ளது. 2 வங்கி கணக்குகளும் என்னுடைய செல்போன் மூலம் இணைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த செல்போன் எண் சொல்லமுடியுமா என்றால் 9842411448 ஆகும். மேற்படி செல்போன் எண் மூலமாக எனக்கும் இவ்வழக்கின் எதிரிகளுக்கும் இடையே எத்தகைய தகவல் தொடர்பும் உண்டா என்றால் இல்லை. வேறோரு செல்போன் எண்ணிலிருந்து தொடர்பு உண்டு. மேற்படி அந்த மற்றொரு செல்போன் எண் என்ன என்றால் அந்த எண் மறந்து போய்விட்டது. கொரோனா நேரத்தில் மறந்து போய் விட்டது. எனவே எனக்கும் எதிரிக்கும் இடையே செல்போன் மூலம் தொடர்பு உள்ளது என்பதை காட்டுவதற்கு எத்தகைய ஆவணங்களையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாது என்றால் சரிதான். நான் மருத்துவக்கடையானது எந்த வருடத்தில் வைத்துள்ளேன் என்றால் 30 வருடமாக இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் எனது கடைக்கு வரும் வருமானத்தில் உரிய முறையில் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி மருத்துவ கடை தொடர்பான தமிழ்நாடு பாண்டிய கிராம வங்கி கணக்கு எண்ணை பரிசீலனை செய்தால் அதன் மூலம் மருத்துவ கடையின் வருமானம் குறித்து தெரிய வரும் என்றால் சரிதான். நான் மருத்துவ கடையின் வங்கி பரிவர்த்தனை சம்பந்தமான ஆவணங்களையோ மற்றும் வருமான வரி தாக்கல் செய்ததற்கான ஆவணங்களையோ இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனந்த் என்பவரை எங்கு வைத்து நான் எந்தெந்த தேதிகளில், எந்தெந்த இடத்தில் சந்தித்தேன் என்று மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் 2018,2019,2020 ஆகிய வருடங்களில் நான் மூன்று முறை சந்தித்துள்ளேன். அவரை நான் மேற்படி சந்தித்த 3 முறையிலும் எத்தகைய பண பரிவர்த்தனையும் மேற்கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான். 2020 மார்ச் 17ல் தான் நான் எதிரியை முதன் முதலில் சந்தித்தேன் என்றால் 2018 ல் முதன் முதலாக சந்தித்தேன். 2018 ல் நான் முதன்முதலாக எங்கு வைத்து சந்தித்தேன் என்ற விபரத்தை எனது மனு, முதல் விசாரணை, அறிவிப்பில் கூறியுள்ளேனா என்றால் சரிதான். 1ம் எதிரியை 2018 டிசம்பர் மாதத்தில் காதர் டீலக்ஸ் மஹாலில் நடந்த மீட்டிங்கில் சந்தித்தேன் என்று மனுவில் கூறியுள்ளேன். மேற்படி நான் சொன்ன விதத்தில் சந்திக்கவில்லை அதன் காரணமாக மனுவிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. எந்தெந்த திட்டங்களின் கீழ் பணம் செலுத்தினால் எவ்வளவு லாபம் கிடைக்கப்பெறும் என்பது குறித்து எதிரிகள் எனக்கு ஏதேனும் திட்ட ஆவணங்கள் கொடுத்தார்களா என்றால் இல்லை. வழக்கு காசோலை மற்றும் அதனுடன் இணைந்த லெட்டர் பேடு தவிர்த்து வேறு எந்தவொரு ஆவணமும் நான் அந்த நிறுவனத்தில் வைப்பீடு செய்துள்ளேன் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை. ஒவ்வொரு முறையும் அவருடைய நிறுவனத்தில் பணம் செலுத்தியதாக சொல்லும் விஷயத்தை

நிர்ணயிக்கும் பொருட்டு நிறுவனத்தின் சார்பாக எந்தவொரு ஆவணமும் கொடுத்தாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஆனால் வாக்குமூலம் கொடுத்துள்ளார். நான் யார் யாரிடம் பணம் வாங்கினேன் என்றால் இராமநாதபுரம் ரியல் எஸ்டேட் தொழில் செய்யும் ஜாபர் அலி என்பவரிடமும் வாங்கியுள்ளேன், ஆனால் எந்த தேதியில் எவ்வளவு பணம் வாங்கியுள்ளேன் என்று எனக்கு நியாபகம் இல்லை. மேலும் மதுரையில் உள்ள மருந்துக்கடை நடத்தும் ராஜசேகர் என்பவரிடம் பணம் வாங்கியுள்ளேன் அது எந்த தேதியில் எவ்வளவு பணம் வாங்கியுள்ளேன் என்றால் தேதி மறந்துவிட்டது மற்றும் பணமும் மறந்துவிட்டது. மேலும் பெருநாழி கிராமத்தை சேர்ந்த ஞானசேகர் என்பவரிடம் பணம் வாங்கினேன் அது எந்த தேதியில் எவ்வளவு பணம் வாங்கினேன் என்றால் எனக்கு தெரியாது. பெருநாழி கிராமத்தை சேர்ந்த ரவிக்குமார், செல்வக்குமார், ரக்சீப் ராஜன், சகாய ராணி, ராஜ்குமார் ஆகியோர்களிடமிருந்து பணம் வாங்கினேன். மேற்படி பணம் எந்த தேதியில் எவ்வளவு பணம் வாங்கினேன் என்று சொல்லமுடியுமா என்றால் நியாபகம் இல்லை. மேற்படி பணம் வாங்கியவர்களிடம் நேரடியாக வங்கி கணக்கில் செலுத்தவில்லை என்றால் கையில் தான் கொடுத்தார்கள். மேற்படி எனது தரப்பில் மேல்சொல்லப்பட்ட நபர்களை சாட்சியமாக விசாரிப்பதற்கு எனக்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். மேற்படி எனது மருத்துவ கடை வருமானம் மூலம் கொடுத்ததாக சொல்லப்பட்ட 35 லட்சத்திற்கு ஏதேனும் ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி பணத்தை எனது மருத்துவக்கடை வங்கி கணக்கில் இருந்து எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரியிடம் ரூ.1 கோடியே 25 லட்ச ரூபாய் செலுத்துவதற்கு போதிய நிதி ஆதாரம் கிடையாது என்றால் சரியல்ல. அவரால் நிதி ஆதாரம் நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினால் மேற்படி நீதிமன்றத்தில் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் நிறுவனத்தில் எந்தெந்த தேதியில் எவ்வளவு கொடுத்தேன் என்ற விபரம் எனக்கு நியாபகம் இல்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் விபரமான எதிரியின் நிறுவனத்தில் டெபாசிட் செய்த டெபாசிட் தாரர்களை விசாரித்து அதன் அடிப்படையில் நான் பணம் டெபாசிட் செய்தேன் என்று சொல்லியுள்ள நிலையில் எந்தெந்த டெபாசிட் தாரர்களை விசாரித்தேன் என்றால் நியாபகமில்லை. 2020 ஜீன் மாதம் 5 எதிரி கைது செய்யப்பட்டு போலீஸ் காவலுக்கு உட்படுத்தப்பட்டார் என்றால் சரிதான். அந்த நேரத்திலேயே நானும் எதிரி மீது போலிஸ் புகார் கொடுத்தேன். என்னை போலவே ஆஜர் எதிரிகளின் மீது பல நபர்கள் போலீஸ் புகார் கொடுத்தார்கள் என்றால் செய்தித்தாள் மூலம் அறிந்தேன்.

**(குறுக்கு விசாரணை வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.)**

(ஒப்பம்/– N. நிலவேஸ்வரன்)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.